**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 33/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 10 |
| Name | : அபிராமி சரண்யா |
| Father/Husband's Name | : பாலகிருஷ்ணன் |
| Village | : செங்கல்பட்டு அரசு மருத்துவமனை |
| Taluk | : அவசர சிகிச்சை பிரிவு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2025.

Accused absent. Petition allowed online.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிகிறேன். நான் கடந்த 30.07.2022 அன்று பகல் 01.20 மணிக்கு செங்கல்பட்டு அரசு மருத்துவமனை பணியிலிருந்த போது 60 வயது மதிக்கதக்க பெயர் தெரியாத பெண் ஒருவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் அன்றைய தினம் 12.50 மணியளவில் செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம் அருகில் சாலை விபத்து ஏற்பட்டதாக கூறி அழைதது வரப்பட்டார். அவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவு இல்லாமல் காணப்பட்டார். அவருக்கு நாடி துடிப்பு இல்லை. அவரது கண்ணின் பாப்பாக்கள் விரிவடைந்த நிலையில் இருந்தது.

அவருக்கு வெளிப்புற காயங்கள் கிழிந்த காயம் 6x5x3 செ.மீ. அளவு கிழிந்த காயம் இடது கால் மற்றும் பாதத்தில் காணப்பட்டது. மேலும் அவரது வயிற்று பகுதியில் கிழிந்த காயம் 15x10x8 செ.மீ. அளவில் இருந்தது. அவரது குடல் வெளியே தெரிந்தது. அவரது இடது முழங்கையில் 10x4 செ.மீ. அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது.

அவருக்கு நாடி துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் பதிவாகவில்லை. இசிஜி பிளாட்லைனாக இருந்தது. அவர் வரும் போதே இறந்ததாக கூறி விபத்து பதிவேட்டில் பதிவு செய்து அவரது உடலினை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். **அந்த விபத்து பதிவேடு அதசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் அளித்த விபத்து பதிவேட்டின்படி 30.07.2022 அன்று மதியம் 01.20 மணியளவில் காவல் துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். இறந்த நபரின் பெயர், விலாசம் தெரியவில்லையென்று விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடையாளம் தெரியாத வாகனத்தால் விபத்து ஏற்பட்டதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.